


# The Bible Standard

(Extra - Edition)

"உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

**Translated from the Booklet**

**பொருளடக்கம்**

## மரித்தோரின் உயிர்த்தெழுதல்

**THE RESURRECTION OF THE DEAD**

BS Tamil Version - 8

பெப்ருவரி 2011

# மரித்தோரின் உயிர்த்தெழுதல்

## THE RESURRECTION OF THE DEAD

***"அவன் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தான்." அப். 17 : 18. "மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்டபொழுது, சிலர் இகழ்ந்தார்கள்." அப். 17 : 32. "மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், ........... எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. (அப்படியானால்) கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை ...... நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் அழிந்து போனார்களே."***

*(1 கொரி. 15 : 13-18 கெட்டிருப்பார்களே என்பது சரியான மொழிபெயர்ப்பு அல்ல - தமிழ் புதுத் திருப்புதல் காண்க.)*

"உயிர்த்தெழுதல்" என்ற வார்த்தை (கிரேக்க வார்த்தை - Anastasis - அனஸ்தஸிஸ்) புதிய ஏற்பாட்டில் 37 தடவைகளுக்கு மேலாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது; மேலும் அதே கருத்துடைய வேறுபல வார்த்தைகளும் உபயோகிக்கப் பட்டிருக்கின்றன; கிறிஸ்தவ மண்டலத்தில் வழங்கப்படும் முதன்மையான சமயக் கோட்பாடுகள் எல்லாம் ஒருவகை உயிர்த்தெழுதலின் மேலுள்ள விசுவாசத்தை வேத உபதேசத் துக்கும் நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கைக்கும் மூல ஆதாரமானதாகத் தெரிவிக்கின்றன - இந்த உண்மையான விஷயங்களையும், தேவ ஆவியினாலே ஏவப்பட்டு எழுதின வாக்கியங்களென எல்லா கிறிஸ்தவர்களாலும் ஒப்புக் கொள்ளப்படுகிற மேலே காட்டிய வேத வாக்கியங்களின் அழுத்தம் திருத்தமான உறுதிச் சொற்களையும் நாம் சிந்தித்துக் கவனிப்போமானால், "மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு" என்று நீ விசுவாசிக்கிறாயா? என்னும் கேள்வியை எந்தக் கிறிஸ்தவனிடமாவது நாம் கேட்க வேண்டுமென்று சொல்லுவது விபரீதமானதாகத் தோன்றலாம்.

என்றாலும் மரித்தோரின் உயிர்த்தெழுதலின் மேலுள்ள நம்பிக்கை கிறிஸ்தவர்களுக்குள் சர்வ சாதாரணமாயிருந்து வருகிறதென்பதைச் சந்தேகிப்பதற்கு உண்மையான நியாயமுண்டு. உயிர்த்தெழுதலின் உபதேசமானது வேத புத்தகத்திலுள்ள மற்ற உபதேசங்களோடு சம்பந்தப்பட்டு அவைகளின் கருத்துக்களை வெளிப்படுத்துகிறபடியாலும் அது மகா முக்கியமானதென்று நாம் நம்புகிறபடியாலும், இவ்விஷயத்தை எல்லாரும் கவனிக்க வேண்டும் என்றும், வேத புத்தகமாகிய தேவ வசனத்தின் வெளிச்சத்தைக் கொண்டும் யதார்த்தமான காரியங்களைக் கொண்டும் நமது கேள்வியை அனைவரும் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்றும் நாம் விரும்புகிறோம்; ஏனெனில் இதனை ஆராய்ச்சி செய்த பிறகு தேவனுடைய ஜனங்களில் இன்னும் அநேகர் உயிர்த்தெழுதல் நியாயமும் தேவ வசனத்துக்குப் பொருத்தமுமான போதனை யென உறுதியாய் நம்பிக் கொள்வார்கள் என்பது எங்கள் நம்பிக்கையாகும்.

### தற்காலத்தில் உயிர்த்தெழுதலைப் பற்றிய பிரசங்கங்கள் வெகு சொற்பமே

"குருவைப்போல் சீஷன்" என்பது ஓர் பழமொழி; எந்த விஷயத்திலும் குரு வகுப்பாருக்கிருக்கும் அபிப்பிராயங்களே அவர்களுடைய சபை ஜனங்களின் அபிப்பிராயமாகும் என்று கருதுவது நியாயமென்பது இப்பழமொழியின் அர்த்தமாகும்.

மரித்தோரின் உயிர்த்தெழுதலின் உபதேசத்தைப் பற்றி எல்லா கிறிஸ்தவ வகுப்பாரிலுமுள்ள குருக்களின் அபிப்பிராயங் களென்னவென்று நிச்சயப்படுத்துவது கஷ்டமான காரியமல்ல; ஏனென்றால் ஈஸ்டர் ஞாயிறு தவிர மற்றச் சமயங்களில் அவ்விஷயம் பிரசங்கிக்கப்படுவது அரிதாயிருந்தாலும், மரித்தோரை அடக்கம் பண்ணும் சமயங்களில் செய்யும் ஒவ்வொரு ஆராதனை முறைமையிலும் உயிர்த்தெழுதலைப் பற்றி அவர்கள் சொல்லும் விஷயம் திட்டமாய் வெளியாக்கப் பட்டிருக்கிறது; எல்லா கிறிஸ்தவ வகுப்பாரிலுமுள்ள குருக் களுக்கும் அவர்களுடைய ஜனங்களுக்கும் மரித்தோரின் உயிர்த்தெழுதலில் கொஞ்சம் கூட நம்பிக்கை கிடையாதென்று நாம் சொல்லுவதினால் குற்றவாளிகளாக மாட்டோமென்பதற்கு (நாம் முற்றிலும் நியாயமுள்ளவர்களாவோம் என்பதற்கு) மரித்தோரை அடக்கம் பண்ணும் வேளைகளில் நடக்கும் ஆராதனைகளில் அவர்கள் வாசிப்பதும் பிரசங்கிப்பதுமாகிய வார்த்தைகளே சாட்சிகளாய் விளங்குகின்றன.

உயிர்த்தெழுதலை கிறிஸ்தவனுக்குரிய நம்பிக்கையாக பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருக்கும் வார்த்தைகளை (1 கொரி. 15) மரித்தோரை அடக்கம் பண்ணும் வேளைகளில் வாசிப்பது வழக்கமென்பது உண்மையேயாயினும், யாரோ ஒருவர் செய்யும்படிக் கேட்டுக் கொண்ட அல்லது ஒப்புவித்த ஓர் வேலையைச் செய்யும்படியாகக் கேட்டுக் கொண்டபடியே செய்து முடித்துவிட வேண்டியதே அந்த ஆராதனையை நடத்தும் குருவின் கடமை என்று அதை வாசிக்கும் குருவுக்குத் தோன்றுகிறது. உயிர்த்தெழுதலைப் பற்றி ஏதோ கொஞ்சம்

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

வாசிக்க வேண்டியது தமது கடமையாகுமென்று அவர் அறிகிறார். ஆனால் வாசிப்புக்குப் பின் அவர் அறிவிக்கும் குறிப்புகளோ, அடக்கம் பண்ணப்படுகிற ஆள் மரித்துப் போனானென்று நம்புகிறதற்குப் பதிலாக, மரித்துப்போன சினேகிதனோ அல்லது அயலகத்தானோ மரிக்கும் முன்னிருந்ததைவிட மரித்த பின் முன்னிலும் அதிகமாய் உயிரோடிருக்கிறான் என்று அவர் விசுவாசிக்கிறதுமல்லாமல், அவருடைய வார்த்தைகளைக் கேட்கிறவர்களும் அப்படியே விசுவாசிக்க வேண்டுமென்று போதிக்கிறார் என்பதை மிகத் திட்டவட்டமாய் நிரூபித்து விடுகின்றன. மரித்துப்போன தங்கள் சிநேகிதனுடைய ஆவி, அறை வீட்டில் அவர்களோடே கூடிக்குலாவி அவர்களோடேயே இருக்கிறதென்றும், பேசும்படி இடங்கொடுத்தால் அவன் அவர்களைப் பார்த்து, "அழாதேயுங்கள், உங்கள் கண்ணீரைத் துடையுங்கள், எனக்காக அழாதேயுங்கள், நான் மகிமையடைந்து மகா சிறப்பாக இருக்கிறேன்" என்று சொல்லுவானென்று தங்கள் சபை ஜனங்களுக்குச் சொல்லி குருக்களானவர்கள், "ஆவிவாதிகள்" "கிறஸ்தவ விஞ்ஞானிகள்" என்பவர்களுடைய கோட்பாடுகளுக்கு அடிக்கடி இணங்கிப்போவது உண்மை யாயிருக்கிறது.

## மரணமென்பது பொய்க் காட்சியா? உண்மையா?

"மரணமென்பது ஓர் மாயமேயன்றி யதார்த்தமான விஷயமல்ல; ஜனங்கள் மரிக்கிறதாகக் காணப்படுகிறார் களேயன்றி உண்மையில் அவர்கள் மரிக்கிறதில்லை; உன்னத பதவியை அடையும்படி மரணமானது அவர்கள் அனுபவிக்கிற ஓர் மாறுதலேயன்றி வேறல்ல; மரணம் என்ற ஒன்றே இல்லை என்று கிறிஸ்தவ விஞ்ஞானிகள் (Christian Scientists) எனப்படுவோர் சொல்லுவது முற்றிலும் உண்மையானதே" என்னும் விஷயங்கள் அநேக கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாகி விட்டன.

இப்படிப்பட்ட அபிப்பிராயங்களுடைய எவரும் மரித்தோரின் உயிர்த்தெழுதலில் நிலையான நம்பிக்கை வைக்க முடியாது; ஏனென்றால் ஒருவரும் மரிக்கிறதே இல்லையானால் மரித்தோரின் உயிர்த்தெழுதல் எப்படி உண்டாகும்? அவர்கள் சாகுமுன் அடைந்திருந்த ஜீவனைப் பார்க்கிலும் மிக அதிகமான ஜீவனை மரித்த பின் அடைந்து கொள்வார்களானால் மரித்தோர் ஜீவனை அடையும்படி உயிர்த்தெழுதலை அடைய வேண்டு மென்று சொல்லுவதில் ஏதாவது கருத்து இருக்கிறதா?

## சரீரம் உயிர்த்தெழுதலை அடையுமா?

ஆனால் ஆயிரக் கணக்கான கிறிஸ்தவ ஊழியக் காரர்கள் இதற்கு மறுமொழியாக, "உயிர்த்தெழுதலைக் குறித்து நாங்கள் பேசுகையில் சரீர உயிர்த்தெழுதலைப் பற்றி மாத்திரம் கருதிப் பேசுகிறோம்; நாங்கள் புதைக்கிற சரீரங்களெல்லாம் மறுபடியும் கல்லறைகளினின்று வெளியே வரவேண்டியவை களாயிருக்கின்றன. மரணத்தில் அவைகளை விட்டுப் பிரிந்த ஆவிகள் உயிர்த்தெழுதலில் மறுபடியும் அச்சரீரங்களுக்குள் நுழைந்து அவைகளைத் தங்களுக்கு ஓர் போர்வை போல அணிந்து கொள்ள வேண்டியதாயிருக்கின்றன; உயிர்த்தெழு தலைப் பற்றிய எங்கள் கருத்து இதுவே" என்று சொல்லு கிறார்கள்.

நன்று! நன்று! கல்வித் திறமையும் நல்ல கருத்துங் கொண்ட அத்தனை ஏராளமான ஜனங்களிடம் இவ்வித ஒவ்வாமையான தப்பபிப்பிராயங்கள் உண்டாகுமென்று யார் தான் நினைத்திருக்கக் கூடும்? அவ்வித நம்பிக்கைகளெல்லாம் வேத உபதேசத்திற்கு விரோதமானவை என்று காட்டும்படி நாம் வேத வசனத்தை ஆராய்ச்சி செய்யத் தொடங்குமுன் இந்தக் குருமாரின் எதிர்பார்ப்பு எவ்விதமாய் தன்னில் தானே முரணாக உள்ளது என்பதைச் சோதித்துப் பார்ப்போமாக.

## மாறுபாடானதும் பொருத்தமற்றதுமான கோட்பாடுகள்

(1) "மரித்துப்போனவன் முன்னிலும் அதிக சிறப்பான நிலைமையில் இருக்கிறான்; ஏனெனில் மானிட சரீரமாகிய சிறையிருப்பிலிருந்து விடுதலை அடைந்திருக்கிறான்; அவனு டைய ஆவி சுயாதீனமடைந்ததும், அழிவுள்ள சரீரத்தினால் யாதொரு தடங்கலும் முடக்கமும் அடையாமல், அது நேரே ஒரே ஓட்டமாய் தேவனிடம் போய்ச்சேருகிறது" என்று குருமார் நமக்குச் சொல்லுகிறார்கள். மரித்துப்போன ஒருவன் அடையும் ஆசீர்வாதத்தையும் சுயாதீனத்தையும் மகத்துவத்தையும் மகிமையையும் அவர்கள் விஸ்தரித்துப் பேசி ஆனந்த பரவசமடைகிறார்கள். சரீரத்தை விட்டு நீங்குவதினால் ஒருவன் அதிகமான ஜீவனையும் நூறத்தனையான அறிவையும் விவரிக்க முடியாத சிலாக்கிய பாக்கியங்களையும் அடைகிற னென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

(2) இந்த வார்த்தைகளோடு மாத்திரம் நிற்காமல், உயிர்த்தெழுதல் சம்பந்தமான வேத வாக்கியங்களையும் அவர்கள் எடுத்துக்காட்டி, அவ்வாக்கியங்களை முற்றிலும் தவறான அர்த்தங் கொண்டு, இன்னும் கொஞ்சக் காலத்தில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், புதைக்கப்பட்ட அதே மாம்ச சரீரங்கள் திரும்பவும் எழுப்பப்பட்டு திரும்பவும் உறுப்போடமைக் கப்படுமென்று சொல்லுகிறார்கள். (உயிர்த்தெழுதலைப் பற்றி Dr. தால்மேஜ் என்பவர் செய்த புகழ்பெற்ற பிரசங்கத்தில் உயிர்த்தெழுதலின் காலையை வர்ணித்துப் பேசினார்; அப்பொழுது பூமியின் நாலா பக்கங்களிலிருந்தும் மானிட சரீரங்களின் பாகங்கள் வந்து ஒன்று கூடி ஆகாயம் முழுவதும் அவைகளால் நிரம்பி இருண்டு போகுமென்றும், ஏதேனும் விபத்தினாலோ வியாதியினாலோ அங்கசேதத்தினாலோ ஒரு விரலோ, ஒரு காலோ, ஒரு கையோ எந்த இடத்தில் தவறிப் போனதோ அந்த இடத்திலிருந்து அவ்வுறுப்புக்களெல்லாம் எழும்பி வந்து ஆகாயத்தைக் கவிந்து கொண்டு அதற்குரிய சரீரத்தோடு ஒன்றுகூடிக் கொள்ளுமென்றும் அவர் பேசினார்.) அப்புறம் மரணத்தில் அச்சரீரங்களை விட்டுப் பிரிந்து போனதாக அவர்கள் சொல்லும் ஆவிகளோ, அச்சரீரங்களுக்குள் திரும்பிச்

சென்று அங்கே நித்திய காலமாய் வாசஞ் செய்யுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். மேலும் உயிர்த்தெழுதலானது நாம் இரட்சிக்கப்படுவதினாலுண்டான மகத்துவமும் மகிமையும் பொருந்திய பலனென்று வேத புத்தகம் காட்டுகிறபடியே, இவர்களும் உயிர்த்தெழுதலைப் பற்றி வியந்து பேசத்தொடங்கி, அதைப் பற்றி அவர்கள் கூறும் தப்பிதமான உபதேசத்தில் மிகவும் களிப்படைந்து, அதன் பலன் எவ்வளவு மகத்துவமும் மகிமையும் பொருந்தினதாயிருக்குமென்று சொல்லவும் அவர்கள் தலைப் படுகிறார்கள்.

மேலே காட்டிய கோட்பாடுகளின் ஒவ்வாமையை அதாவது அவைகள் ஒன்றுக்கொன்று மாறுபாடாயிருப்பதை அவர்கள் கவனியாமல் முற்றிலும் புறக்கணித்து விடுகிறார்கள். அவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்கிறவர்களும் அதே விதமாய் ஸ்திரமும் தர்க்க சாமர்த்தியமும் அற்றவர்களாயிருப் பார்கள் என்பது அவர்களுடைய நம்பிக்கை; அப்படியே பிரத்தியட்சமாய் அவர்களுடைய நம்பிக்கைகளும் ஆதரிக்கப் படுகின்றன. ஏனென்றால், அவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்கிற ஜனங்களில் ஏராளமானவர்கள் மாறுபாடானவைகளை யாதொரு சங்கடமுமில்லாமல் அவர்கள் கேட்கிறபடியே உட்கொண்டுவிடுகிறார்கள். எவ்வளவுக்கதிகமாய் அவர்களுடைய நம்பிக்கை ஸ்திரமும் நியாயமும் அற்றவைகளாயிருக்கிறதோ அவ்வளவுக் கதிகமாய் தங்களுக்கு அதிக உறுதியான விசுவாசமுண்டென்று தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்ள அநேக காரணங்கள் உண்டென்று அவர்களில் அநேகர் நினைப்பதாகக் காணப்படுகிறார்கள். என்றாலும் உண்மையான விஷயம் என்னவென்றால், இந்த ஜனங்களில் எதையும் எளிதில் நம்பும் தன்மையாகிய பேதமைக் குணம் பெலமாய்க் குடிகொண்டிருக்கிறது என்பதே. ஆனால் தேவனுடைய வசனம் போதியாததும் அதற்கு நேர் எதிரிடையாகவுமுள்ள நியாயமும் உண்மையுமற்ற விஷயங்களை அவர்கள் நம்புவதினால் யாதொரு பிரயோஜனமும் அடைய மாட்டார்களென்பதை நிச்சயமாயறிவார்களாக.

## மேலே காட்டிய முறையில் நிகழும் உயிர்த்தெழுதல் ஏமாற்றத்தையே விளைவிக்கும்

ஐம்பது வயது சென்று மரிக்கிற ஓர் மனுஷன் தன் மரணத்தினால் முன்னிலும் அதிகமான ஜீவனையும், நூறத் தனையான அறிவையும், யாதொரு தடங்கலும் முடக்கமு மில்லாமல் வெகு வேகத்துடன் பிரயாணம் செய்வதற்கான சுயாதீனத்தையும், வேறு அநேக சிலாக்கிய பாக்கியங்களையும் அடையக் கூடியவனானால், உயிர்த்தெழுதல் என்பது அவர்கள் சொல்லுகிற முறைப்படியே அவனை மறுபடியும் 'களிமண் ணாலான ஓர் சரீர வீட்டுக்குள் பிரவேசிக்கச் செய்து, அவன் மரணமடையுமுன் இருந்ததுபோல் அச்சரீரத்திலேயே தங்கியிருப் பதாகுமென்ற கருத்தைக் கொடுக்கக் கூடியதாயிருப்பதால், உயிர்த்தெழுதலினால் அவன் துக்கமடைந்து வெட்கப்பட்டுப் போவான் என்பதை அறிந்து கொள்ள முடியாதது யார்? மேலும் இவ்விதமாக ஓர் சரீரத்தினாலேயாவது சரீரத்திற்குரிய கட்டுப் பாடுகளினாலேயாவது யாதொரு தடங்கலும் முடக்கமு மில்லாமல் உலக முழுவதும் அநேக நூற்றாண்டுகளாக சுதந்திரமாக அலைந்து திரிந்து கொண்டிருந்த ஓர் சுயாதீன ஆவியாக அவன் இருந்திருந்தால், மானிட சரீரத்திற்குரிய சத்துவங்களையும் அனுபவங்களையும் விட்டு நீங்கி அநேக நூற்றாண்டுகளாகிவிட்டபடியால், அவைகளையெல்லாம் முழுவதும் மறந்து போயிருக்கக்கூடிய ஒருவகைப்பட்ட சுயாதீனமான ஆவியைத் திரும்பவும் ஓர் மானிட சரீரத்திற்குள் அடைத்து வைப்பதானால், தேவனுடைய நீதிக்கும் நியாயத்திற்கும் அச்செய்கை ஒத்துவருமா? மரித்துப் போகிறவர்களை அடக்கம் பண்ணுகையில் குருமார் பிரசங்கிக்கிறபடி ஓர் சரீரமில்லா திருப்பது "பூரணமும் நிறைவுமான பேரின்பமாய்" இருக்கு மானால், சரீரம் உயிர்த்தெழுதலை அடைவதினாலும் யதேச்சை யாய்த் திரிந்த ஆவியை அதற்குள் காவல் பண்ணிவைப் பதினாலும் முன் அனுபவித்த பூரணமான பேரின்பத்துக்கு ஏதாவது கூடுதல் இருக்க முடியுமா?

மேலே காட்டிய குறிப்புகளினால், கிறிஸ்தவ ஜனங்களில் பெரும்பான்மையோர் வேத புத்தகம் சொல்லுகிறபடி மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு என்றோ அல்லது அவர்களே போதிக்கிறபடி, சரீர உயிர்த்தெழுதல் உண்டு என்றோ விசுவாசிக்கிறதில்லை என்று நாம் சொன்னது யதார்த்தமும் நியாயமுமானது என்று நாம் அறிகிறோம்.

## தேவ வசனத்தினாலுண்டாகும் நம்பிக்கை

நாம் எழுதும் விஷயத்துக்கு மேலே காட்டியவைகளை முகவுரையாக வைத்துக் கொண்டு, "மரித்தோரின் உயிர்த் தெழுதல்" என்றால் என்ன? என்றும், முதலாம் உயிர்த் தெழுதலில் பங்கடையும் கர்த்தருடைய ஜனங்களுக்குரியதாக மாத்திரமல்ல, நியாயத்தீர்ப்புக்குரிய உயிர்த்தெழுதலில் (யோவா. 5 : 29): (ஆக்கினை அடையும்படி என்பது சரியான மொழிபெயர்ப்பு அல்ல) பங்கடையும் வாய்ப்பை அடைய இருக்கும் மனுக்குலம் முழுவதுக்குமுரிய நம்பிக்கையாகவும், ஒரே நம்பிக்கையாகவும் பாக்கியமுள்ள நம்பிக்கையாகவும் உயிர்த்தெழுதலைப் பற்றி வேத வாக்கியங்கள் ஏன் பேசுகின்றன? எவ்விதத்தில் பேசுகின்றன? என்றும் நாம் படித்து அறிவோமாக.

உயிர்த்தெழுதலைப் பற்றிய வேத உபதேசத்தை நம்புகிறவர்கள், மரணம் என்பது மரணமே (ஜீவன் ஒழிந்து போவதே) என்ற மரணத்தைக் குறித்துள்ள வேத உபதேசத் தையும் நம்ப வேண்டும். அப்படியானால்தான், "மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தவர்களும் அழிந்து போனார்களே" என்று அப்போஸ

தலன் சொல்லும் வார்த்தைகளின் கருத்தை அறியக் கூடியவர்களாவோம்.

பவுல் அப்போஸ்தலன் சொல்லும் இவ்வாக்கியம் வேறு இடங்களில் இதைப் பற்றிச் சொல்லும் வேத வாக்கியங்களின் போதனைக்கு வித்தியாசமானதல்ல. "மரித்தோர் மரித்தோரே" என்று அவைகளெல்லாம் ஏகோபித்துச் சாட்சி இடுகின்றன. – "அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்" (சங். 146 : 4). "அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான்; அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான்" (யோபு 14 : 21). "நீ போகிற பாதாளத்திலே (ஷியோலில் – மரண ஸ்திதியில் – பிரேதக் குழியில்) செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லை" (பிர. 9 : 10).

## யாரை நம்புவது? தேவனையா? அல்லது சாத்தானையா?

இவ்விஷயத்தில் தற்கால போதகர்களின் போதனையும் தேவ ஆவியினால் எழுதப்பட்ட தேவ வசனத்தின் போதனையும் ஒன்றுக்கொன்று எதிரிடையாயிருக்கின்றன. "மரித்தோர் ஒன்றும் அறியார்கள்" என்று வேத வாக்கியங்கள் சொல்ல, தற்கால வேத சாஸ்திரிகளோ, "மரித்தோர் எல்லாம் அறியக்கூடியவர்களா யிருக்கிறார்கள்" என்று வாதாடுகிறார்கள். மரித்தோர் உண்மையில் மரித்துப்போயிருக்கிறார்கள் என்றும், பாவத்திற்குரிய தேவ தண்டனையாக நமது குலத்துக்கு விரோதமாய் "செத்துக் கொண்டு சாவாய்" என்று தேவன் சொன்னபடியே மரணத்தை அவர்கள் அனுபவிக்கிறார்களென்றும் வேத புஸ்தகம் சொல்லுகிறது. எதிராளிகளோ ஏவாளை ஏமாற்றும்படி சாத்தான் சொன்ன "நீங்கள் சாகவே சாவதில்லை" என்ற வஞ்சகமான வாக்கியத்தை ஏற்றுக் கொண்டு, மரித்தோர் மரிக்கவில்லை என்றும், பாவத்திற்கு விரோதமாய் தேவன் விதித்த தண்டனை பலிதமாகவில்லை என்றும், மரணமானது மனுக்குலத்துக்கு நேரிட்ட ஓர் சாபமாயிருக்கும் போது அதை ஓர் ஆசீர்வாதமென்றும், அது பரிணாமவாதக் கொள்கையின்படி மனுஷன் முன்னேற்றமடைவதற்கான ஓர் காரியமென்றும் நிரூபிப்பதற்குத் துணிகரங் கொள்ளுகிறார்கள். வடதுருவமும் தென்துருவமும் ஒன்றுக்கொன்று எவ்வளவு தூரமாயிருக்கிறதோ அவ்வளவாய் இவ்விரண்டு உபதேசங்களும் ஒன்றுக்கொன்று எதிரிடையா யிருக்கின்றன. இவ்விரு உபதேசங்களையும் படிப்பிக்கிற இரு போதகர்கள் யாரெனில், நாம் முன்பே காட்டியிருக்கிறபடி, ஒருவர் தேவன், மற்றொருவன் ஆதி முதற்கொண்டு பொய்யனா யிருக்கிற சாத்தானே. நாம் எதை விசுவாசிப்போம்? நாம் யாரை நம்புவோம்?

இரட்சிப்புக்குரிய ஏற்பாடு முழுவதும் இந்தக் கேள்விக்குச் சம்பந்தப்பட்டதே. மரணமானது ஆதாமின் மூலமாய் நேரிட்ட பாவத்திற்குரிய தண்டனையாயிராதிருந்தால், "ஜீவனும் அதின் பரிபூரணமும்" கிறிஸ்துவின் மூலமாய் உயிர்த்தெழுதலினாலே சம்பாதிக்கப்பட்ட தேவனுடைய ஆசீர்வாதமாகவும் கிருபைவரமாகவும் இருக்க முடியாது. மரணமானது பாவத்தினாலுண்டான தண்டனையும் சாபமுமென்றும், இவைகளிலிருந்து மனிதனை விடுதலை பண்ண கிறிஸ்து மரித்தாரென்றும், விடுதலையானது மரித்தோரின் உயிர்த்தெழுதலினாலேயே சம்பவிக்கிறதென்றும், தலைப்பு வாக்கியத்தில் அப்போஸ்தலன் சொல்லுகிறபடி மரித்தோர் வேறு எவ்வகையாலும் பிற்கால ஜீவனை ஒருக்காலும் அடைய முடியாதென்றும் தேவனுடைய சித்தாந்தம் தெரிவிக்கிறது. இந்த தேவனுடைய சித்தாந்தத்துக்கு, கிறிஸ்தவர்களால் மிகப்பெரிய அளவில் விஸ்தாரமாய் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதும், மிகுந்த குருட்டாட்டமாய் (அறிவீனமாய்) பேசவும் எண்ணவும் தூண்டுகிற சக்தியை அவர்களுடைய மனதுகளில் உபயோகிக்க முயலுகிறதுமான சாத்தானுடைய சித்தாந்தம் நேர் எதிரிடையானது. மரணமானது நிறைவான ஜீவனையும் சுயாதீனத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்குகிற (வரச்செய்கிற) ஓர் ஆசீர்வாதமென்று சாத்தானுடைய கோட்பாடு துணிந்து சொல்லுகிறது (வெளிப்படையாகக் கூறுகிறது); ஆகவே அக்கோட்பாடு உயிர்த்தெழுதலை, சிறையிருப்பையும் சங்கடத்தையும் கட்டுப்பாட்டையும் வேதனையையும் துன்பத்தையும் வரச்செய்கிற ஓர் சாபமாக ஆக்கும்.

எதிராளியாகிய சாத்தானுடைய வஞ்சகத்தினால் குருடாக்கப்பட்டு (அறிவீனத்திற்குட்பட்டு) கிறிஸ்தவ மண்டலத்திலுள்ள பேர்போன வேதசாஸ்திரிகளில் ஏராளமானவர்களும் அவர்களைப் பின்பற்றுகிற அநேகரும் வேத புத்தகம் போதிக்கிற பாவநிவாரண உபதேசத்தைப் புறக்கணித்துத் தள்ளுகிறார்கள் என்பது ஆச்சரியமல்ல ;– அந்த உபதேசம் "மனுஷனால் (ஆதாமால்) மரணம் உண்டானபடியால், மனுஷனால் (மனிதனாகிய கிறிஸ்து இயேசுவினால்) மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று" என்றும், "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்றும் வெளிப்படையாகக் கூறுகிறது. 1 கொரி. 15 : 21, 22.

## உயிர்த்தெழுதலும் பரிணாமவாதமும்

மரணத்தின் உண்மை (மரணம் உண்டு என்பது) மறுக்கப்படுமானால், பாவத்தின் உண்மையை (பாவம் உண்டு என்பதை) மறுப்பதும் கஷ்டமல்ல. ஆதித்தகப்பனாகிய ஆதாம் தேவனுடைய சாயலாகவும் அவருக்கொப்பாகவும் சிருஷ்டிக்கப்படாமல் குரங்கின் சாயலுக்கும் ரூபத்துக்கும் நெருங்கினவிதமாய் சிருஷ்டிக்கப்பட்டானென்று சொல்லப்படுமானால், அவன் தாழ்வான அறிவையுடையவனாயிருந்தானென்பதும், ஆகவே நித்திய ஜீவனையடைவதற்கான பரீட்சையில் வைக்கப்படுவதற்கு அவன் தகுதியற்றவனாயிருந்தானென்பதும் நிச்சயமாகிறது. இப்படிச் சொல்லுவது, மனுஷன் எப்பொழுதாவது ஓர் பரீட்சையை அடைந்து அதில் தவறி கிருபையினின்றும் விழுந்தானென்னும் விஷயத்தை மறுப்பதற்கொப்பாகும். மனுஷனுடைய விழுந்து போகுதல் மறுக்கப்பட்டு அதற்குப்பதிலாக மனுஷன் குரங்குக்குரிய தனது சாயலை இழந்து தேவனுக்குரிய சாயலை

படிப்படியாய் அடைந்து கொண்டு தற்காலம் வரை மனுஷன் உண்மையாகவே முன்னேற்றமடைந்து வருகிறானென்று சொல்லப்படுமானால், மனுஷன் விழுந்து போகுதலை அடையாத காரணத்தினால் அவன் விழுந்து போகுதலினின்று (பாவத்திலிருந்து) மீட்கப்பட வேண்டிய அவசியமுமில்லையென்று சொல்லுவது நியாயமாயிருக்கும்.

வேத வசனத்தின் கருத்தை அறியாமல் பொய்யான ஆதாரங்கள்மேல் இவ்விதமாக நியாயம் (தர்க்கம்) பேசுங் காரணத்தால், ஆதாமினால் இழந்துபோன ஜீவனைத் திரும்பவும் கிரையத்துக்கு வாங்கத்தக்கதாக தமது சொந்த ஜீவனை நமது மீட்கும் பொருளாக (பிரதிக்கிரையமாக) நமக்காகக் கொடுத்து, நம்முடைய கர்த்தராகிய இயேசு நமது மீட்பராயிருக்கிறாரென்றும், நம்முடைய (சபையின்) பாவங்களை மாத்திரமல்ல, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறாரென்றும் வேத வசனம் திரும்பத்திரும்பச் சொல்லுகிறதை மறுப்பதும் நியாயமாகுமென்று தோன்றுகிறது. 1 யோவா. 2 : 2; 1 தீமோ. 2 : 5, 6.

## கடுமையான ஏமாற்றம் அநேகரைப் பிடித்திருக்கிறது

இவ்விதமாக முற்காலத்தில் அப்போஸ்தலன் போதித்து வந்த இரு முக்கிய அம்சங்களையும் கிறிஸ்தவ மண்டலத்திலிருக்கும் தற்கால போதக வகுப்பார் தள்ளிப் போடுகிறார்களென்பதை நாம் காண்கிறோம்;- “அவன் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் பிரசங்கித்தான்”. பாவத்தினின்றும் அதற்குரிய தண்டனையாகிய மரணத்தினின்றும் மனுக்குலத்தை மீட்டுக் கொண்ட மீட்பராக இயேசுவையும், அந்த மீட்புக்குரிய வேலையின் மகிமையுள்ள பலனாக மனுக்குலம் அடையப் போகும் உயிர்த்தெழுதலையும் அவன் பிரசங்கித்தான். வேத நிபந்தனைகளின் பேரில் நித்திய ஜீவனை ஏற்றுக் கொள்ள விருப்பமுள்ளவர்களெல்லாருக்கும் ஈடுபலியினால் சம்பாதிக்கப்பட்ட ஆசீர்வாத புண்ணியங்களை உயிர்த்தெழுதலின் மூலமாய் கிடைக்கும்படி தேவன் செய்வார். தற்காலத்திலிருக்கும் விசுவாசத்தைக் குறித்து நமது கர்த்தர் தாமே சொன்ன வார்த்தைகளை இவ்விடத்தில் ஞாபகப்படுத்துவது நல்லது: “மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?” லூக். 18 : 8.

## நம் ஐம்புலன்களின் சாட்சி

மரணத்தைக் குறித்து வேத புத்தகம் தெரிவிக்கும் உறுதியான வார்த்தைகள், நமது சிருஷ்டிகரால் மனுஷர் என்ற முறையில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஐம்புலன்களும் கொடுக்கிற அத்தாட்சிக்கு ஒத்திருக்கின்றன. (மரணத்தைக் குறித்து வேதபுத்தகம் சொல்லுகிறதுபோலவே நமது ஐம்புலன்களும் சாட்சிபகருகின்றன). இது நாம் எதிர்பார்க்க வேண்டிய விஷயந்தான்; என்றாலும் தேவ அறிவிப்பு (வேத புத்தகம் - தேவனுடைய வசனம்) நமது புலன்கள் கொடுக்கிற அத்தாட்சியை ஆட்சேபிக்குமானால், நமது புலன்கள் தப்பிதத்திற்குள்அகப்படக் கூடியதானென்று நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் வேத வாக்கியங்களுக்கு விரோதமான ஓர் மனுஷீகக் கொள்கையை நமது புலன்கள் ஆட்சேபிக்குமானால் அக்கொள்கையை நீக்கிவிட்டு புலன்களின் அத்தாட்சியே உண்மையானதாகப் பற்றிக் கொள்ள வேண்டும். வேத வாக்கியங்களும் நமது புலன்களும் ஏகோபித்து ஒன்றை ஒப்புக் கொள்ளுமானால், அதைப் பற்றியுள்ள மனுஷீகக் கொள்கையை நாம் பற்றிக்கொள்வது முற்றிலும் அநியாயமாகுமென்பது நிச்சயம்; ஏனெனில் அது தேவ வசனத்துக்கும் நமது புலன்களுக்கும் விரோதமாயிருக்கிறது. மேலும் தேவனால் கொடுக்கப்பட்ட (பாவத்தினால் பழுதாயிருந்தாலும்) புலன்களையும் தேவனுடைய சாட்சியையும் புறக்கணித்து தள்ளிவிடுகிற எவனும் அந்தகாரத்துக்குள்ளும் குழப்பத்துக்குள்ளும் தடுமாற்றத்துக்குள்ளும் வழிநடத்தப்படுவதைத் தவிர வேறு எந்த நன்மையையும் அடைந்து கொள்ளும்படி எதிர்பார்க்க முடியாது. 18 நூற்றாண்டுகளுக்குமுன் நடந்தது போலவே இன்றைக்கும் குருடரான வழிகாட்டிகள் குருடரை அவிசுவாசமும் வஞ்சகமுமாகிய குழிக்குள் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்.

தேவனுடைய வசனம் கொடுக்கிற சாட்சியைப் போலவே, நமது புலன்கள் கொடுக்கிற சாட்சியும், மரணம் என்பது ஜீவனின் அழிவேயன்றி ஜீவனின் பெருக்கம் அல்ல என்பதே. சாகும் தறுவாயிலிருக்கிற மனுஷனைப்பார்; ஜீவசுடர் (ஜீவசக்தி) இல்லாமற் (ஒழிந்து) போகிறவரைக்கும் அவனுடைய மானத சடத்துவ சக்திகள் பெலவீனமடைந்து கொண்டே போகிறதைக் கவனி. அவனிடமிருந்து ஏதாவது வெளியேறிப் போகிறதை நீ காண்கிறதில்லை; மரணப்படபடப்பைத் தவிர வேறெதையும் நீ கேட்கிறதுமில்லை; நாடித் துடிப்பு (இருதயத்துடிப்பு) படிப்படியாய் நின்று போவதை நீ அறிகிறதுமன்றி சுவாசிக்க முடியாமல் மூச்சொடுங்குவதையும் நீ கவனிக்கிறாய்; இவ்விஷயத்தில் நீ பிரயோகிக்கக்கூடிய உன்னுடைய புலன்களெல்லாம், உன்னால் நேசிக்கப்பட்ட உன் நண்பன் மரித்துப்போனான் (இனி அவன் உயிரோடில்லை) என்று உனக்குச் சொல்லுகின்றன. உன்னைச் சுற்றிலும் பார்த்து விஷயத்தைச் சிந்தனைசெய்து, மற்றவைகளைப் பற்றி “இனிமேல் என்ன?” என்று விசாரித்துக்கேள். உன்னுடைய புலன்கள் கொடுக்கிற மறுமொழி என்னவென்றால், “நடக்கப் போகிற அடுத்த காரியம் சரீரம் பதங்கெட்டுப்போகுதல்; ஜீவசுடர் போய்விட்டதும், பிரேதம் புதைக்கப்பட வேண்டும்; அது தூசிக்குத் தூசியாகவும் மண்ணுக்கு மண்ணாகவும் சாம்பலுக்குச் சாம்பலாகவுமாகிறது” உன் சிநேகிதனுடைய மரணத்துக்கும் மிருகத்தினுடைய மரணத்துக்குமுள்ள ஒற்றுமையை நீ கவனிக்கிறாய். மனுஷனுடைய மரணத்துக்கும் மிருகத்தினுடைய மரணத்துக்கும் யாதொரு வித்தியாசத்தையும் உன்னுடைய புலன்கள் அறிவதில்லை. “இவைகள் சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள்; ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் (ஜீவ ஆவி) ஒன்றே” என்று வேத வாக்கியங்களும் அறிவிக்கின்றன. பிர. 3 : 19).

## மனுஷன் மிருகங்களிலும் மேன்மையுள்ளவன்

ஆனால் நித்திய ஜீவனை அடையும்படியான ஓர் வாஞ்சையை உன் சிருஷ்டிகர் உன்னில் இயல்பாகவே பதித்திருக்கிறபடியால், திரும்பவும் ஜீவனை அடைவதற்கு ஏதாவது நம்பிக்கை உண்டா? மனுஷன் மிருகத்தைப் பார்க்கிலும் விசேஷித்தவனல்லவா? என்பவை போன்ற கேள்விகள் உன் மனதில் உண்டாகின்றன. இயல்பான வகையாய்ப் பேசுவோமானால் "மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவனல்ல" என்று வேத புத்தகம் கூறுகிறது; ஆனால் மிருகத்துக்காக உண்டாக்காத ஓர் ஏற்பாட்டை (நித்திய ஜீவனை அனுபவிப்பதற்குரிய ஏற்பாட்டை) சிருஷ்டிகர் மனுஷனுக்காக உண்டாக்கினார் என்று வேத வாக்கியங்கள் நிச்சயப்படுத்திக் காட்டுகின்றன. மனுஷனுடைய உடலுக்குள் சாவாமையுள்ள ஓர் தன்மையை அமைத்து அல்ல, அவனுடைய ஜீவனை நித்தியகாலமாய் தொடர்ச்சியாய் அனுபவிப்பதற்கு ஏதுகரமாக ஏதேன் தோட்டத்தில் ஜீவனை ஆதரிக்கும் விருட்சங்களை அமைத்துவைத்து – மனுஷன் நித்திய ஜீவனை அனுபவிப்பதற்குரிய இந்த ஏற்பாடு ஆதியில் தேவனால் ஏற்படுத்தப்பட்டதென்றும் வேத வாக்கியங்கள் நிச்சயப்படுத்திக் காட்டுகின்றன; என்றாலும் இந்த ஏற்பாடு ஓர் நிபந்தனைக்குட்பட்டதாயிருந்தது, அதாவது தனது சிருஷ்டிகருக்கு மனுஷன் கீழ்ப்படிதலுள்ளவனாயிருந்தால் மாத்திரம் தனக்குக் கொடுக்கப்பட்ட ஜீவனை தொடர்ச்சியாய் அனுபவிக்க வேண்டியவனாயிருந்தான்.

மனுஷனுடைய கீழ்ப்படியாமையே அவன் மேல் மரணமாகிய தீர்ப்பை வரப் பண்ணினதென்றும், ஜீவனை ஆதரிக்கும் விருட்சங்களின் கனியைப் புசிக்க முடியாதபடி தோட்டத்தை விட்டு வெளியே துரத்தப்பட்டதினால் அத்தீர்ப்பு அவனில் நிறைவேற்றமடைந்ததென்றும் வேத புத்தகம் தெரிவிக்கிறது. இவ்விதமாக தோட்டத்தைவிட்டுத் துரத்தப்பட்டதினால், "செத்துக் கொண்டுசாவாய்" என்ற தீர்ப்பு ஆதாமின்மேல் படிப்படியாய் பலிதமானது; அவன் கொஞ்சங்குறைய முதல் ஆயிர வருஷ நாள் முடிவுவரை உயிரோடிருந்தான். தலைமுறைகள் செல்லச்செல்ல அவனுடைய சந்ததியார் அதிகமதிகமாய்ப் பெலவீனமடைந்து, (சுகாதார ஏற்பாடுகளிலும் மருந்திலும் வைத்தியசாஸ்திரத்திலும் எவ்வளவோ பெரிய முன்னேற்றம் அடைந்திருந்தாலும்) தற்காலத்தில் மனுஷனுடைய சராசரி வயது ஏறக்குறைய முப்பத்தைந்தாகக் குறைந்துவிட்டது – "பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும் அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே"; "சத்துருவின் தேசம்" போய்ச்சேரும்படி, "அவர்கள் ஜீவனுள்ளோரின் தேசத்திலிருந்து சீக்கிரமாய் அறுப்புண்டு போகிறார்கள்"– சத்துருவின் தேசம் என்பது மரணமாகிய பெரிய சிறைச்சாலையேயாகும்; அதில் இப்பொழுது ஏற்கெனவே நமது மனுக்குலத்திலுள்ளவர்கள் இரண்டாயிரம் கோடிப்பேருக்கு மேலிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது – "அங்கே துன்மார்க்கருடைய தொந்தரவு ஓய்ந்திருக்கிறது; பெலனற்று விடாய்த்துப் போனவர்கள் அங்கே இளைப்பாறுகிறார்கள்" யோபு 3 : 17-19.

## தேவன் உலகத்தில் அன்பு கூர்ந்தார்

மரித்தோரைப் பற்றி நாம் செய்யும் ஆராய்ச்சிகள் வேத வாக்கியங்களுக்கு ஒத்திருக்கின்றன. தேவன் கொடுத்த மரண தண்டனை நீதியானதென்று அவை நமக்கு நிச்சயப்படுத்திக் காட்டுகிறதோடு, நமது சிருஷ்டிகர் இரக்கமும் பரிவும் உள்ள தேவனென்றும், நம்மைப் பார்த்துப் பரிதபிக்க யாதொரு கண்ணும் நம்மை விடுதலை பண்ண யாதொரு புயமும் இல்லாதிருந்த பொழுது, அவருடைய புயமே நமக்கு இரட்சிப்பைக் கொண்டு வந்ததென்றும் அவைகள் தெரிவிக்கின்றன. மேலும் பாவம் வியாதி வருத்தம் சஞ்சலம் முதலியவைகளிலிருந்து நம்மை விடுவிக்கவும், மரணமாகிய காவற்கிடங்கிலிருந்து நம்மை விடுதலை பண்ணவும், தேவனுடைய புத்திரருக்குரிய சுயாதீனங்களையும் சிலாக்கியங்களையும் நாம் திரும்பவும் அடையும்படி செய்வதற்கும் யேகோவாவினுடைய நீட்டப்பட்ட புயமாக இயேசு கிறிஸ்துவையே வேத வாக்கியங்கள் நமக்குக் காண்பிக்கின்றன.

தேவனுடைய இந்த அனுதாபத்துக்கு இணக்கமாகவே, நாம் இரட்சிக்கப்படும்படி தமது ஒரே பேறான குமாரனை அவர் உலகத்துக்கு அனுப்பினார் – மீட்கும் பொருளாகிய பிரதிக்கிரையத்தை உண்டாக்கவும், பின்பு தேவ இரக்கத்தால் கிடைத்த அந்த மீட்கும் பொருளை ஏற்றுக் கொள்ளும் அனைவரையும் விழுந்து போகுதலின் மூலமாயுண்டான சகலவித கேடுபாடுகளிலிருந்தும் மரித்தோரின் உயிர்த்தெழுதலின் மூலமாய் விடுவித்து மறுபடியும் சீர்படுத்தவும் அவரை அனுப்பினார். ஆனால் தேவ அன்பானது தேவ நீதியை அபத்தமாக்க முடியாது; இயேசுவை விசுவாசிக்கிறவர்களை தேவன் நீதிமான்களாக்குகிறவராயிருக்க வேண்டுமானால், அவர் நீதியுள்ளவராயிருக்க வேண்டியது அவசியம்; ஆகவே மனுக்குலத்தைப் பாவத்தினின்றும் அதின் பலனாகிய மரணத்தினின்றும் விடுதலை செய்து இழந்து போனவைகளைத் திருப்பிக் கொடுக்கும் வேலை ஆரம்பமாகுமுன்னே, தேவ நீதியின் கோரிக்கைகள் – பாவத்திற்குரிய தண்டனை அல்லது அபராதம் – நமது மீட்பரால் செலுத்தப்பட வேண்டும். அதாவது தேவ நீதியை திருப்தி செய்ய வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் பாவத்திற்குரிய தண்டனை எது? எது அல்ல? என்பதற்கு சிறந்த அத்தாட்சியை நாம் காண்கிறோம்; ஏனென்றால் பாவத்திற்குரிய நீதியான தண்டனையை (அபராதத்தை) கர்த்தராகிய இயேசு நமக்காகச் செலுத்தினதினால், அவர் நமக்காக எதைக் கொடுத்தாரோ அதுவே நமக்கு விரோதமாய் ஏற்பட்ட தண்டனை என்பதை நிரூபிக்கும். அவர் நமக்காக என்ன செய்தார்? அவர் தமது ஜீவனை நமக்காகக் கொடுத்தார்; "அவர் நமது பாவங்களுக்காக மரித்தார்"; "அவர் அநீதியுள்ளவர்களுக்காக நீதியுள்ளவராய் மரித்தார்"; "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்"; அவர் தமது

ஆத்துமாவை (நமது) குற்ற நிவாரண பலியாக ஒப்புக் கொடுத்தார்"; "அவருடைய தழும்புகளால் குணமாக்கப் படுகிறோம்" (ரோம. 5 : 8; 1 பேது. 3 : 18; 1 கொரி. 15 : 3; மத். 26 : 38; ஏசா. 53 ; 4-12.)

## நித்திய வேதனை பாவத்திற்குரிய தண்டனை அல்ல

நம்மை மீட்கும்படி கர்த்தராகிய இயேசு நித்திய வேதனையை அனுபவிக்கவில்லை என்பது பிரத்தியட்சமான காரியம்; ஆகவே நமது பாவங்களுக்காக ஏற்பட்ட தண்டனை நித்திய வேதனை அல்ல என்பதற்கு ஆதாரம் தேவையானால், நாம் இப்பொழுது தகுதியான நிரூபணத்தை அடைந்திருக் கிறோம். நம்முடைய பாவங்களுக்காக இயேசு மரித்ததும், நமது நிமித்தமாக அவருடைய ஜீவனைப் பலியிட்டதைப் பரலோக பிதா ஏற்றுக் கொண்டதும், பாவத்தினால் நாம் இழந்து போனது நமது ஜீவனே என்பதையும், மனுக்குலத்தின் மேல் தேவ பிரமாண மானது விதித்த பூரண தண்டனையானது ஜீவனை இழந்து போகச் செய்ததேயாகும் என்பதையும் நிரூபிக்கின்றன. மரணத் தீர்ப்புக்குட்பட்ட முழு மனுக்குலமும் மரணமாகிய பெரிய சிறைச்சாலைக்கு (பிரேதக்குழிக்கு, ஷியோலுக்கு, ஹேட்சுக்கு) சென்றிருக்கின்றன. ஆகையால் நமது அருமையான மீட்பரும், நமக்காகத் தமது ஜீவனை விட்டுவிட்டபொழுது, பிரேதக்குழிக்கே (ஷியோலுக்கே, ஹேட்சுக்கே) போனார். அவர் நமது இருப்பிடத்தைத் தெரிந்தெடுத்துக் கொண்டு, நமக்காக நமது பாவங்களுக்குரிய தண்டனையை அனுபவித்தார்.

ஆனால் இயேசுவின் மரணம் மனிதனை மரணத்தீர்ப்பிலிருந்து மீட்டுக்கொள்ளுகிறது (விடுவிக்கிறது); மரணத்திலிருந்து அவர் அடைந்த உயிர்த்தெழுதலோ அவரை ஏற்றுக் கொண்டு அவருக்குக் கீழ்ப்படிகிற அனைவரும் நீதிமான்களாக்கப்படுவதற்கு நிச்சயத்தை அளித்தது. மீட்கும் பொருள் (பிரதிக் கிரையம்) ஈடு செய்யப் போதுமானதும் திருப்திகரமானதாயும் இருந்ததென்று பரலோக பிதா அத்தாட்சி வழங்கினார்; இவ்விதமாக பிதாவுக்குக் கீழ்ப்படிதலுள்ள வராயிருந்த நமது கர்த்தர் மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பப் பட்டார்; அவர் பிதாவினுடைய முதன்மையான காரியஸ்தராகவும் பிரதிநிதியாகவுமிருந்து, தமது விலையேறப்பெற்ற இரத்தத்தி னால் மீட்டுக்கொள்ளப்பட்ட முழு உலகத்தையும் ஆசீர்வதிக்கும் வேலையை சீக்கிரமாய் ஆரம்பிப்பார்.

## மரணச் சிறையிருப்பில் இருக்கிறவர்கள் விடுவிக்கப்படுதல்

உலகத்துக்குரிய ஆசீர்வாதம் என்பது சிறைச் சாலையைத் திறந்து மரணமாகிய அச்சிறைச்சாலைக்குள் ஆறாயிரம் வருஷங்களாகப் போய்க்கொண்டிருக்கிற சிறை களை விடுதலை செய்வது என அர்த்தங்கொள்ளும். இது காரணம் பற்றியே நமது கர்த்தர் ஜீவனைக் கொடுக்கிறவர் (இரட்சகர்) என அழைக்கப்படுகிறார்; ஏனென்றால் அவருடைய பெரியவேலை ஆதாமுக்குள் ஜீவனை இழந்து போன மனுக்குலத்துக்குத் திரும்பவும் ஜீவனைக் கொடுப்பதாயிருக்கும். மேலும் மனுக்குலத்துக்குத் திரும்பவும் ஜீவனைக் கொடுப்பது, செத்துக் கொண்டே போகச் செய்யும் கிரியையின் ஓர் பாகமாயிருக்கிற வேதனைகளையும், வியாதிகளையும், கஷ்டங்களையும் நீக்குதல் என்ற கருத்தைக் கொடுக்கிறபடியால் நமது மீட்பர் பெரிய வைத்தியர் என்று அழைக்கப்படுகிறார்.

மரணமாகிய சிறைச்சாலையைத் திறப்பதையும் அதில் சிறைப்பட்டவர்களை விடுதலை செய்வதையும் பற்றிச் சொல் லுகிற தீர்க்கதரிசனமானது (ஏசா. 42 : 6, 7) தம்மைப் பற்றியதே என்று எவரும் ஆட்சேபிக்கக்கூடாதபடி நமது கர்த்தராலேயே சரியாய் சொல்லப்பட்டது; ஆனால் அவருடைய சொந்த உயிர்த்தெழுதல் நடைபெற்றவுடனே, மரணமாகிய சிறைச் சாலையைத் திறந்து அதில் சிறைப்பட்டவர்களை உயிர்த் தெழுதல் மூலமாய் அவர் விடுதலை செய்யவில்லை. ஆனால் இந்த வேலை எப்பொழுது செய்யப்படுமென்று அவர் நமக்குச் சொல்கிறார் (யோவா. 5 : 25, 28, 29). - "பிரேதக்குழிக ளிலுள்ள அனைவரும் அவருடைய (இயேசுவினுடைய) சத்தத் தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் தீமை செய்தவர்கள் ஆக்கினையை (நியாயத்தீர்ப்பை) அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்"; "கேட்கிறவர்கள் (அப்பொழுது அவருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அப். 3 : 22, 23) பிழைப்பார்கள்."

## சுவிசேஷ யுகத்தில் தேவனுடைய பிரதான நோக்கம்

இவ்விதமாக நமது கர்த்தர் சுவிசேஷ யுகம் முடிந்தபின்பு வரப்போகும் யுகத்தில் தாம் செய்து முடிக்கும் வேலையைப் பற்றிச் சுட்டிக்காட்டினார்; ஏனென்றால் பிதாவினால் முன்பே நியமிக்கப்பட்ட ஏற்பாடு அவ்விதமாகவேதான். "பிதா குமாரனை அனுப்பினார்"; குமாரன் மீட்பின் வேலையை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டு அதைச்செய்து முடித்தார்; இவ்வேலையை அவர் முடித்த காலத்துக்கும் மேசியாவின் அரசாட்சிக் காலத்தில் உலகமானது பிரபலமான ஆசீர்வாதங்களை அடையும்படி குறிக்கப்பட்ட "திரும்பக் கொடுக்கப்படும் காலங்களாகிய" உயிர்த்தெழுதலின் காலத்துக்கும் இடையிலுள்ள காலமாகிய சுவிசேஷ யுகம், மனுக்குலம் ஆசீர்வதிக்கப்படும் வேலை ஆரம்பமாகுமுன், வேறோரு வேலை செய்யப்படும்படியாக ஒதுக்கிவைக்கப்பட்டது; அந்த வேலையாதெனில், மத்தியஸ்த ராஜ்யத்துக்குரிய மகிமைகளில் தங்கள் ஆண்டவராகிய இயேசுவோடு உடன் சுதந்தரராயிருக்கும்படி, "ராஜரீகமான ஆசாரியக் கூட்டம்", "சொந்த ஜனம்", "பரிசுத்த ஜாதி" முதலிய பெயர்களால் அழைக்கப்படும் ஒரு "சிறு மந்தை" தெரிந் தெடுக்கப்படுவதேயாகும். இந்த சிறுமந்தையாகிய பரிசுத்தவான் கள் (கிறிஸ்துவின் சரீரமாகிய சபை), அந்தகாரத்தின் அதிபதியை அழிப்பது, மரணமாகிய சிறைச்சாலையைத் திறப்பது, சிறைப்பட்டவர்களை பாவம், அறியாமை, வீண் பக்தி முதலியவைகளிலிருந்து விடுதலை செய்வது, "உன் சந்ததிக்குள்

(கிறிஸ்துவுக்குள்ளும், தெரிந்தெடுக்கப்பட்ட அவரது சரீரமாகிய சபைக்குள்ளும்) பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர் வதிக்கப்படும்" என்று (கலா. 3 ; 8, 16, 29) தேவன் ஆபிரகா முக்குக் கொடுத்த கிருபை பொருந்திய வாக்குத்தத்தத்தில் அடங்கிய சகல நியமங்களையும் நிறைவேற்றுவது முதலிய மேன்மையும் மகிமையும் பொருந்திய வேலைகளைச் செய்து முடிப்பதில் தங்கள் மீட்பரோடுகூட சேர்ந்து கொள்வார்கள்.

## முதலாம் உயிர்த்தெழுதல்

ஒரு முதலாம், அல்லது ஒரு பிரதானமான உயிர்த் தெழுதலும் அதற்குப் பின்பு ஒரு பொதுவான உயிர்த்தெழுதலும் உண்டு என்னும் வேத உபதேசத்தை அறியும்படி மேலே காட்டியவைகள் நமக்கு வழிகாட்டுகின்றன. முதலாம் அல்லது பிரதான (விசேஷித்த) உயிர்த்தெழுதல் நமது கர்த்தராகிய இயேசுவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் மாத்திரம் உரியது. முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்கள் பாக்கியவான்களும் பரிசுத்தருமாயிருக்கிறார்கள்; அவர்கள்மேல் இரண்டாம் மரணத்துக்கு அதிகாரமில்லை; அன்றியும் அவர்கள் தேவனுக்கு முன்பாக ராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருந்து பூமியின்மேல் அரசாளுவார்கள். முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைகிறவர்கள் – மானிட இனமாக அல்ல – மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாக அல்ல – மானிட இனத்திலி ருந்து ஆவிக்குரிய இனங்களில் மகா உயர்வானதாகிய தெய்வீக இனமாக மறுரூபமாக்கப்படுகிறார்கள்; ஏனென்றால் மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது. அவர்கள் மறுரூபமாக்கப்படுவதில் விளங்கும் சில இலட்சணங் களை அப்போஸ்தலன் தெரிவிக்கிறார். "அழிவுள்ள தாய் விதைக் கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும் மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீன முள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்.": அதாவது முதலாம் உயிர்த்தெழுதலை அடைகிறவர்கள் அழிவுள்ளதற்குப் பதிலாக அழியாமையையும், பெலவீனத்திற்குப் பதிலாக பலத்தையும், கனவீனத்திற்குப் பதிலாக மகிமையையும், ஜென்ம (மானிட) சரீரத்திற்குப் பதிலாக ஆவிக்குரிய சரீரத்தையும் அடைவார்கள்.

## முதலாம் உயிர்த்தெழுதலின் காலம்

இந்த முதலாம் அல்லது பிரதான உயிர்த்தெழுதல், கிறிஸ்துவின் சரீரமாகிய சுவிசேஷ சபை நிறைவடைகிறபொழுது அதாவது சுவிசேஷ யுகத்தின் முடிவில் நடைபெறுமென்று வேத வாக்கியங்கள் தெரிவிக்கின்றன. அப்பொழுது உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களும் இந்த உயிர்த்தெழுதலில் பங்கடைவார்கள்; அவர்கள் ஆவியின் ஜீவிகளாக "மறுரூபமாக்கப்படுதல்" க்ஷணப்பொழுதில் நடைபெறுவதாயிருக்கும்; ஏனெனில் மானிட ஜீவிகளாக அவர்கள் மரிக்கிற நிமிஷமே பூரண ஆவியின் ஜீவிகளாக அவர்கள் "மறுரூபமாக்கப்படும்" நிமிஷமாயிருக்கும்.

மரித்திருக்கும் கர்த்தருடைய ஜனங்கள், தாங்கள் மரித்ததற்கும் உயிர்த்தெழுதலை அடைவதற்கும் இடையிலுள்ள காலத்தில், மீதியான மற்ற மனுஷரைப் போலவே, மானிடராக உள்ளபடியே மரித்துப் போயிருக்கிறார்கள் என்றும், யாதொன்றும் அறியார்கள் என்றும், வேத வாக்கியங்கள் தெரிவிக்கின்றன; ஆனாலும் அவர்கள் உயிர்த்தெழுதலை அடையும்படி தேவன் திட்டஞ்செய்திருப்பதாலும், அவர்கள் அதைக் குறித்து அறிவிக்கப்பட்டு அதின் மேல் நம்பிக்கை வைத்திருப்பதாலும், அவர்கள் (கிறிஸ்துவுக்குள்) நித்திரை செய்கிறார்களென்றும் (தங்கள் பிரயாசங்களை விட்டொழித்து இளைப்பாறு கிறார்களென்றும்) அப்போஸ்தலன் சொல்லுகிறபடி (2 தீமோ. 4 : 8) நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே கொடுக்கும் நீதியுள்ள கிரீடத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

## உலகத்தாரின் உயிர்த்தெழுதல்

அப்படியே மனுக்குலம் முழுவதும் இன்னும் தேவனை அறியாதிருந்த போதிலும், அவர்கள் ஆதாமின் மூலமாய் மரணாக்கினைத் தீர்ப்புக்குட்பட்டிருக்கிறபடியாலும், அத்தீர்ப்பின் வேளையில் அவர்களெல்லாரும் ஆதாமின் இடுப்பிலிருந்த படியால் (அவர்கள் அப்பொழுது பிறவாதிருந்தபடியால்) அவர்கள் அந்த தீர்ப்பைப் பற்றி யாதொன்றும் அறியக்கூடாதவர்களாய் இருக்கிறபடியாலும், அவர்கள் இயேசுவுக்குள் நித்திரை செய்கிறார்கள் என வேத புத்தகம் சொல்லுகிறது; ஆகையால் இப்பொழுது எல்லா மனுஷரையும் மீட்கும் பொருளாக இயேசு தமது ஜீவனை ஒப்புக்கொடுத்திருக்கிறதினாலும் அவர்க ளெல்லாரும் மரணத்திலிருந்து எழுப்பப்படுவார்களாதலாலும், அப்படி எழுப்பப்படுவது தேவனால் ஏற்பட்டிருக்கிற ஒழுங்கு என்று தற்காலம் அறிகிறவர்களெல்லாரும் மனுக்குலம் முழுவதும் (தங்கள் மரண முதல் உயிர்த்தெழுதலை அடையும் வரையுள்ள காலத்தில்) நித்திரை செய்கிறார்கள் என்று விசுவாசத்தின் மூலமாய் சொல்வது நியாயமேயாகும்.

ஆகவே சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறவர்களாகிய சிறுபான்மையோர் மாத்திரமல்ல, மரணமாகிய சிறைச்சாலைக்குள் பிரவேசிக்கிற நமது அருமையான சிநேகிதர் (மனுக்குலத்தார்) அனைவருமே உயிர்த்தெழுதலை அடைவார்கள் என நாம் நம்பி ஆவலோடு எதிர்பார்க்கும்படி அப்போஸ்தலன் போதிக்கிறார், அவர் சொல்லு கிறதாவது :– "அன்றியும் சகோதரரே, நித்திரையடைந்தவர்களின் (நித்திரை செய்கிற நமது சிநேகிதர் அனைவரின்) நிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போல துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசு வானவர் (எல்லா மனுஷரையும் மீட்கும் பொருளாக). மரித்து (எல்லா மனுஷருக்கும் கர்த்தராகவும் ஜீவனைக் கொடுக் கிறவராகவும் இருக்கத்தக்கதாக) பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே. அப்படியே இயேசுவுக்குள் நித்திரை

அடைந்தவர்களையும் (தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் அவர் கிரையத்துக்குக் கொண்ட எல்லாரையும்) (தேவன் மரணமாகிய, சிறைச்சாலையிலிருந்து) அவர் மூலமாய் கொண்டுவருவார் (என்று நாம் முழுமனதோடும் விசுவாசிப் போமாக)" என்பதே.

ஆனால் முதலாம் உயிர்த்தெழுதலானது கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களும் பாக்கியவான்களும் பரிசுத்தர்களுமாயிருக்கிற அவருடைய சரீரமாகிய சபை என்னப்பட்ட சிறுமந்தையின் உயிர்த்தெழுதலாக இருக்கிற படியால் உலகத்துக்காக நியமிக்கப்பட்டிருக்கிற பொதுவான உயிர்த்தெழுதல் நியாயத்தீர்ப்புக்குரிய உயிர்த்தெழுதல் என அழைக்கப்படுகிறது. (யோவா. 5 : 29- ஆக்கினை அடையும்படி என்பது தவறான மொழிபெயர்ப்பு – ஆங்கில புதுத்திருப்புதல் காண்க) தேவன் சம்பந்தப்பட்டமட்டில், ஆதாமுக்கு முதலாவது கொடுக்கப்பட்டிருந்தவைகளும் பின்பு அவனுடைய கீழ்ப்படி யாமையினால் அவன் இழந்து போனவைகளுமாகிய சகலத்தையும் மனுக்குலத்துக்குத் திரும்பவும் கொடுப்பதற்கு, அதாவது நமது இரட்சகருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் அவைகளைத் திரும்ப அடைவதற்கு சகல ஆயத்தமும் செய்யப்பட்டிருந்தாலும், இந்த ஆசீர்வாதத்தை அடைவதற்குப் புது உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிருப்பதால், பொதுவான உயிர்த் தெழுதல் நியாயத்தீர்ப்புக்குரிய (பரீட்சைக்குரிய) உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்படுகிறது.

## மரண நித்திரையிலிருந்து எழுப்பப்படுவது பூரண உயிர்த்தெழுதல் அல்ல

கிறிஸ்துவின் மூலமாய் நித்திய ஜீவனை முழுமனதோடு நாடித் தேடுகிறவர்களுக்கும், எப்பொழுதும் தெய்வீக அரசாங்கத்தின் சட்டமாயிருக்க வேண்டிய நீதிக்குரிய நியமங் களை முழுமனதோடு கைக்கொள்ளுகிறவர்களுக்கமே அன்றி வேறெவருக்கும் நித்திய ஜீவனை கிறிஸ்துவின் மூலமாய்க் கொடுக்க வேண்டுமென்பது தேவனுடைய நோக்கமல்ல; ஆகவே உலகமானது மரணமாகிய நித்திரையிலிருந்து எழுப்பப்படுவது பூரணமும் நிறைவுமான உயிர்த்தெழுதலாயிராது; அதற்கு அதிகக் குறைவானதாயிருக்கும்; ஏனென்றால் வேத புத்தகத்தின் பூரண கருத்துப்படி, உயிர்த்தெழுதல் என்னும் வார்த்தை பாவத்திலும் மரணத்திலுமிருந்து சம்பூரணமான ஆள்தத்து வத்தை (ஜீவனின் பரிபூரணத்தை) அடையும்படி பூரணமாய் எழும்பச் செய்தல் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.

மரணமாகிய சிறைச்சாலைக்குள் பிரவேசித்திருக் கிறவர்களுக்காக கிறிஸ்துவும் சபையும் சேர்ந்து உலகத்திலே செய்யும் முதல் வேலையானது, அவர்கள் மரித்தபொழுது அவர்களுக்கிருந்த சடத்துவ நிலைமைகளுக்கொத்த பிரகாரமாய் அவர்களை விழித்தெழும்பச் செய்வதாகும். ஜனங்களின் சூழ்நிலைகள் அப்பொழுது அதிகமாய் சீர்திருத்தப்படும். பேதமை (அறிவீனம்) ஒழிந்து அறிவுண்டாகியிருக்கும்; சுயநலமான சட்டத்தையுடைய பாவ ஆட்சி ஒழிந்து நீதியின் அரசாட்சியும் அன்பின் பிரமாணமும் அக்காலத்தில் உண்டாகியிருக்கும்; சாத்தான் ஜாதிகளை வஞ்சிக்க முடியாதபடி அவன் ஆயிர வருஷம் கட்டப்பட்டிருப்பான். தேவ ராஜ்யத்தில் இவ்வித அனுகூலங்களை அடைந்து மனுக்குலம் முழுவதும் கர்த்தரை அறிகிற அறிவிலும் அவருடைய அன்பின் பிரமாணத்துக்கு இசைவாய் முழுமனதோடு தங்கள் ஜீவியங்களை நடப்பிப்பதிலும் தேர்ச்சியடைந்து கொண்டு வரவேண்டியதாயிருக்கும். அக்காலத்தில் நூறு வருஷப் பரீட்சையடைந்த பின்பு ஒருவன் சரியான வழியில் யாதொரு பிரயாசையும் நன்மை செய்வதில் வளர்ச்சியும் காட்டாதேபோவானாகில், அவன் அக்காலத்தின் நிலைமைகளுக்குத் தக்கபடி ஓர் வாலிபனாகப் பாவிக்கப்பட்ட போதிலும், ஜனத்திலிராதபடிக்கு இரண்டாம் மரணத்தினால் அறுப்புண்டுபோவான். ஏசா. 65 : 20.

## உலகத்தின் உயிர்த்தெழுதல் படிப்படியாய் பூரணமடையும்

நன்மையில் அபிவிருத்தியை (வளர்ச்சியை) உரு வாக்கத் (உண்டாக்கத்) தவறிப்போய், தான் பிரயோஜனப்படுத்திக் கொள்ளக் கூடிய வாய்ப்பை துண்டித்துக் கொள்ளும் ஒருவனுக்கு இவ்விதமாக நடுத்தீர்ப்பு சம்பவிக்கும்; ஆனாலும் அதே நடுத்தீர்ப்பு, அதே நியாயாதிபதியின் மூலமாய், நீதியைத் தேடி ராஜ்யத்தின் பிரமாணங்களுக்கு இணக்கமாக, அபிவிருத்தியை உண்டாக்கிக் கொண்டுவரும் அனைவருக்கும் அனுகூலமாய், பயன்படும் (அனுகூலத்தை உண்டாக்கும்). ஆகையால் வருஷத்துக்கு வருஷம் அவர்கள் மனம் மற்றும் சன்மார்க்க சடத்துவ விஷயங்களில் அதிகமதிகமாய்ப் பெலன் கொண்டு வளர்ச்சியடைந்து கொண்டிருப்பார்கள்; அதாவது தகப்பனாகிய ஆதாமில் ஆதியில் வெளிப்படுத்தப்பட்டிருந்தபடியே, சிருஷ்டி கரின் குணசாயலாகவும் அவருக்கு ஒப்பாகவுமிருக்கத்தக்கதான சம்பூரணமான ஆள்தத்துவத்தின் நிறைவான நிலைக்குப் படிப்படியாய் நெருங்கி வந்து கொண்டிருப்பார்கள். இவ்விதமாக உலகத்தாரின் உயிர்த்தெழுதல் படிப்படியாய் நடைபெறும் வேலையாயிருக்கும்; அதின் முதல் வேலை உணர்ச்சியற்ற நிலைமையாகிய நித்திரையிலிருந்தும் இல்லாதேபோன -நிலைமையிலிருந்தும் விழித்தெழும்பச் செய்வதாயிருக்கும்; அதைத்தொடர்ந்து நடைபெறும் வேலைகள் நியாயத்தீர்ப்பின் (பரீட்சையின்) போக்குகளுக்குத் தக்கதாக இருக்கும் – பரீட்சையிலிருக்கிறவர்களின் நடக்கை அங்கீகரிக்கப்படும் அல்லது அங்கீகரிக்கப்படாமற்போகும்; சீர்திருத்தப்படக் கூடாதவர்களாகவும் தேவனுடைய கிருபை வரமாகிய நித்திய ஜீவனுக்கு அபாத்திரவான்களாகவும் காணப்படுகிறவர்கள் இரண்டாம் மரணத்தீர்ப்பை (நித்திய அழிவாகிய தண்டனையை) அடைவார்கள். – அக்காலத்தில் வழக்கத்திலிருக்கும் ஆசீர்வாத மான நிலைமைகளையும் நிபந்தனைகளையும் சந்தர்ப்பங் களையும் பிரயோஜனப்படுத்திக் கொண்டு சடத்துவ, மானத

சன்மார்க்க சம்பூரணத்தையும் தேவபக்திக்கடுத்த பூரணத்தையும் அடைந்து கொள்ளுகிறவர்கள் தேவனுடைய பெரிய கிருபை வரமாகிய நித்திய ஜீவனைப் பெறவும் அனுபவிக்கவும் பாத்திரவான்களானவர்களாக முடிவான நியாயத்தீர்ப்பைப் பெற்று சதாகாலமும் இப்பூமியிலே நித்தியவாசிகளாய் வாழ்ந்திருப்பார்கள். (இவ்விதமாக உலகமானது உயிர்த்தெழு தலை அடைய அதாவது சம்பூரணமான ஆள்தத்துவத்தையும் அதை நிலைத்திருக்கச் செய்வதற்குரிய சம்பூரணமான குணத்தையும் (நீதி, அன்பு, ஞானம், வல்லமை முதலியவை களையும்) அடைய ஆயிரம் வருஷம் செல்லும்). - இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்த முமில்லை; ஏனெனில் இனி பாவமுமிராது, பாவத்துக்குரிய தண்டனைகளில் எதுவுமிராது; ஏனென்றால் முந்தினவைகள் ஒழிந்துபோயின. வெளி. 21 : 4.

## மரணம் நித்திரைக்கு ஒப்பிடப்படுகிறது

உயிர்த்தெழுதலின் வேலை ஆரம்பமாகும் வரைக்கும் மரித்தோரின் நிலைமை முற்றிலும் உணர்ச்சியற்ற நிலைமை யாயிருப்பதேயாகும்; "நீ போகிற பாதாளத்திலே (ஷியோலில் - மரணஸ்திதியில்) செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லை"; "அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான்; அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான்". கடந்த காலங்களிலுள்ள ஆதிப் பிதாக்கள் ஒவ்வொருவரையும் பற்றி, "அவன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தான்", "அவன் நித்திரையடைந்தான்" என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அப்படியே புதிய ஏற் பாட்டிலும் அதே வாசகம் எழுதப்பட்டிருக்கிறது; "ஸ்தேவான் நித்திரையடைந்தான்." கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவரைத் தரிசித்தவர்களைப் பற்றி பவுல் அப்போஸ்தலன் பேசுகையில், "அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள்; சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள்" என்று சொல்லுகிறார். மேலும் அவர் "கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களைக்" குறித்துப் பேசுகையில் அவர்களை அவருடைய சரீரத்தின் அவயவங்களாக கிறஸ்துவுக்குள்ளிருக்கிற சபையாகவும், "இயேசுவுக்குள் நித்திரை செய்கிறவர்களை" உலகமாகிய முழுமனுக்குலமாகவும் வித்தியாசப்படுத்திக் காட்டுகிறார். பிர. 9 : 10; யோபு 14 : 21; 1 ராஜா. 2 : 10; 11 : 43; அப். 7 : 60; 1 கொரி. 15 : 18; 1 தெச. 4 : 14.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் மரித்துப் போன அவருடைய சரீரமாகிய சபையின் அங்கங்கள் யாவரும் அவருடைய இரண்டாம் வருகை மட்டும் இந்த நித்திரை நிலையிலேயே இருப்பார்களென்று அப்போஸ்தலன் சொல்லு கிறார்.

[கிறிஸ்து என்பது புது சிருஷ்டி என்ற முறையில் நமது கர்த்தருக்கும் அவரது உத்தியோகத்துக்குமுரிய பட்டப் பெயர்; இயேசு என்று பெயரோ "நமது மீட்பர்" என்ற முறையில் அவருடைய பெயராகும்; ஏனெனில் அவருடைய பலியின் மூலமாகவே எல்லா மனுஷரும் மரித்தோரின் உயிர்த்தெழுதலில் பங்கடைவதற்குரிய அவகாசம் கிடைக்கிறது.]

கிறிஸ்து இரண்டாந்தரம் வந்திருக்குங் காலத்தில் உயிரோ டிருக்கும் சபையின் அங்கங்கள் அதற்குமுன் நித்திரையடைந் திருக்கிற அங்கங்களுக்குமுன் பலனளிக்கப்பட மாட்டார் களென்றும் அவர் உறுதியாய்ச் சொல்லுகிறார். உயிரோடிருக் கிறவர்கள், "நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வ தில்லை"; ஏனெனில் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்; பின்பு மீந்திருக்கிறவர்களாகிய உயிரோடிருக் கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு கடைசியாக மறுரூபமாக்கப் படுவார்கள். மரித்தோர் மரண நிலையிலிருந்து விழித்தெழும்பும் நிமிஷம், அவர்கள் மரித்த நேரத்துக்கு அடுத்த நிமிஷமாயிருப் பதாக அவர்கள் காண்பார்கள் - "ஏனென்றால் பிரேத குழியிலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமுமில்லையே."

## தேவனுடைய சர்வ வல்லமையும் ஞானமும்

உலகத்தார் எழுப்பப்படும்போது அடையும் சரீரங்கள் அவர்கள் மரிக்கும்போது இருந்த சரீரங்களின் அதே அணுக்களால் ஆனவைகளாய் இல்லாதிருப்பினும், அவர்கள் சாகும்போதிருந்த அதே சரீரங்களாகத் தானிருக்கும்; ஏனென் றால் நமது சிருஷ்டிகருக்கு மனுஷனுடைய சரீரத்துக்கான பூமியின் தூளெல்லாம் ஒன்றுபோலப் பிரயோஜனப்படத் தக்கவைகளாகும். இவ்விதமாக பரிசுத்த பவுல் சொல்லுகிறார் - "நீ விதைக்கும்போது இனி உண்டாகும் மேனியை விதைக்கிறதில்லை" (1 கொரி. 15 : 37.) திரும்ப எழுப்பப்படும் உலகத்தாரின் சரீரங்களின் அணுக்கள் மரணத்துக்கு முன்னிருந்த சரீரங்களின் அணுக்களாயிராமல் வேறானவை களாயிருக்கிறபடியால், அச்சரீரங்கள் உண்மையாகவே புதிய சரீரங்களாக இருக்கும்; ஆனால் அவைகள், மரித்து மண்ணுக்குச் சென்ற சரீரங்களுக்குச் சரியான பதில் சரீரங்களாயிருக் கிறபடியால் பழைய சரீரங்கள் எனப்படும். தேவனை அறியாமலும் அவருடைய வல்லமையை அறியாமலுமிருக்கிற உலக மனமானது உயிர்த்தெழுதலின் உபதேசத்தை ஒப்புக் கொள்ள முடியாமல் வாதாடுகிறதென்பது ஆச்சரியமான காரியமல்ல. உயிர்த்தெழுதலானது மகா பிரமாண்டமான வேலையாயும் மனுஷனுடைய ஆதிச் சிருஷ்டிப்பைப் பார்க்கிலும் மகா ஆச்சரியமானதாயுமிருக்கும்; இவ்விதமாக, உயிர்த் தெழுதலின் வேலையினால் மனுக்குலத்துக்கும் தேவ தூதர்களுக்கும் முன் ஒரு காலத்திலும் வெளிப்படுத்தப்படாத விதமாய் தேவனுடைய சர்வ வல்லமையானது வெளிப்படுத் தப்பட்டு அது மகா மகத்தான காட்சியாக விளங்கும்.

ஆதியில் மனுஷனை தமது சாயலாக உண்டாக்கினவர், மறுபடியும் அவனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுடரை அவனில் ஏற்றி அவனை ஜீவ நிலைமைக்குக் கொண்டு வருவதில் மாத்திரமல்ல, அதைப் பார்க்கிலும் மகா விசேஷித்த

பிரகாரமாய், தற்காலத்தில் ஒவ்வொரு மனுஷனுக்குமிருக்கும் மூளையைப் போலொத்த மூளையை அந்த மனுஷனுக்குத் திரும்பக் கொடுத்து அவனவனுடைய தற்கால ஜீவியத்தில் சம்பவித்திருக்கும் சகல சம்பவங்களையும் சங்கதிகளையும் அவனவனுடைய மூளையில் குறித்துவைத்து ஞாபகப்படுத்து வதில் தமக்கிருக்கும் தமது அளவற்ற ஞானத்தையும், சர்வ வல்லமையையும் அவர் விளங்கப் பண்ணுவார். ஒலிப் பெட்டியினுடைய (phonograph) மெழுகுக் குழாய் பேசுகிற வனுடைய வார்த்தையை தனக்குள் பதித்துக் கொண்டு வேறு எந்த இடத்திலும் சமயத்திலும் பேசுகிறது போலொத்த விஷயத்துக்கு இச்செய்கை ஓரளவாய் ஒத்திருக்கிறது. கோடா கோடிக்கணக்கான ஜனங்களின் எண்ணங்களை இவ்விதம் திரும்பக் கொண்டு வருவதற்குரிய வல்லமை, ஆதியும் அந்தமுமில்லாத தேவன் ஒருவருக்கே உரியதாகுமேயன்றி வேறெவரும் அப்பேர்ப்பட்ட வல்லமையை உரிமை பாராட்ட முடியாது. நமது தலைகளிலுள்ள முடிகளையும் அவைகளின் தொகையையும் அறிந்திருக்கிற வரென்றும், அவருடைய சித்தமில்லாமல் ஒரு அடைக்கலான் குருவி முதலாய் தரையிலே விழாதென்றும் சொல்லப் படுகிறவரான அவர் ஒருவர் மாத்திரமே, அப்பேர்பட்ட பெரிதும் அதிசயமுமான காரியத்தைச் செய்ய முடியும். அவருடைய வசனத்தின் வெளிப்படுத்தலின் மூலமாய் நாம் அவரில் நம்பிக்கை வைக்க அறிந்து கொண்டால் மாத்திரம், நாம் செய்து முடிப்பதாக அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கும் இப்படிப்பட்ட பெரிய பிரமிக்கத்தக்க அற்புதத்தில் நாம் விசுவாசம் வைக்க முடியும்.

## மரித்தோரெல்லாரும் ஒருமிக்க எழுப்பப்படுவதில்லை

சகல மனிதர்களும் ஒரே சமயத்தில் ஒருமிக்க மொத்தமாய் உயிரோடெழுப்பப் படுவார்களென்று நாம் எதிர்பார்க்கவும் கூடாது. ஆனால் மேசியாவின் ராஜ்ய ஸ்தாபக சமயத்தில் சாகாமல் உயிரோடிருக்கிறவர்களுக்குள் அந்த இராஜ்ய வேலை முதலாவது ஆரம்பிக்கும். மரண வல்லமை யினின்று பூரணமான சுயாதீனத்தை இந்த ஜனங்கள் அடையாமலிருக்கிறபடியால், அவர்கள் உயிரோடிருக் கிறவர்களாக மதிக்கப்படாமல் மரித்தோராகவே கருதப்படுவார்கள். ஆதாமுக்குள் இழந்துபோன சுதந்தரத்தைத் திரும்பக் கொடுக்கும் வேலை இவர்களுக்குள் கொஞ்ச தூரம் விருத்தியடைந்த பின்பு, மரணநித்திரை அடைந்திருக்கிறவர்களில் சிலர் எழுப்பப்பட்டு மகிமை பொருந்திய அந்நாளின் ஆசீர்வாதங்களில் பங்கடை யலாம். அதற்குப்பிறகு சிலரும், பின்பு வேறு சிலரும் இப்படியாக எல்லாரும் மரண நித்திரையினின்றும் எழும்புவார்கள். அந்நாளிலே அதாவது கிறிஸ்துவின் நாளிலே பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் மனுஷகுமாரனுடைய சத்தத்தைக் கேட்பார்கள் – அதாவது வெளியே வாருங்கள் என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிவார்கள் – என்பதும், அவர்கள் தேவனுடைய இரக்கத்தையும் நன்மையையும் அன்பையும் அறியும் அறிவுக்குக் கொண்டுவரப்படுவார்களென்பது உண்மையானதே என்பதும் நிரூபணமாகும். அவர்களில் விருப்பமுள்ளவர்கள் யாவரும் கடைசியாகப் பூரண மனுஷீகத்தைப் பெற்றுக் கொள்வார்கள் – இழந்துபோன சுதந்தரத்தை அடையும் தேவனுடைய ஜனங்களுக்காக, பூமியும் அக்காலத்தில் தேவனுடைய பரதீஸாக (பூரண வாசஸ்தலமாக) ஆயத்தமாக்கப்பட்டு ஜனக்குடியிருப்புக்குத் தகுதியுள்ளதாக்கப் படும். காரியம் இப்படியிருப்பதால் தற்காலத்தில் "அழைக்கப் பட்டவர்கள்" எல்லாருக்கும் நாங்கள் கூறும் புத்திமதி யாதெனில், "இராஜ்யத்தில் ஓர் ஸ்தானத்தை அடைவதற்காக நமது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்பதே.

***

Visit us at : **www.biblestandardindia.com**

## அறிவிப்பு

**நமது கர்த்தருடைய ஞாபகார்த்த பஸ்கா 2011 ஏப்ரல் மாதம் 15–ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 6:00 மணிக்குமேல் என்பதை அறிவிக்கிறோம்.**

***

*For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :*

**Bro. V. Vincent Jeyakumar**

Laymen's Home Missionary Movement

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY